2011 ஜனவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறை தொகுதியில், அங்கலக்குறிச்சி மற்றும் கரியன்செட்டிபாளையம் ஊராட்சிகளில் சமுதாயக் கூடம் அமைப்பதற்கு ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கூறியிருக்கின்றேன். அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயக் கூடம் கட்டவேண்டி அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் வரப்பெற்றிருக்கின்றன. ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக் கொண்டு, ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கைக்கேற்ப, தேவை மற்றும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் சமுதாயக் கூடம் கட்டித் தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள இடங்களில், இடவசதி இருக்கின்றபட்சத்தில் நிதிநிலையைப் பொறுத்து சமுதாயக் கூடம் கட்ட அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

30—

கட்டட வசதி

***113741—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) காங்கேயம், வீரணம்பாளையம், பட்டக்காரன்புதூர் பால் கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்போது?

[2011 ஜனவரி 12

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காங்கேயம், வீரணம்பாளையம் மற்றும் பட்டக்காரன்புதூர் ஆகிய கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு, சங்கத்தின் நிதியிலிருந்து கட்டடங்கள் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பாலை அங்கே கொள்முதல் செய்யும் சங்கங்கள் சொந்தக் கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடங்களிலே இயங்குகின்றன. குறிப்பாக, மேல்நிலை குடிநீர்த் தொட்டிகளுக்குக் கீழே பல சங்கங்கள் இயங்கி வருகின்றன. எந்தச் சங்கத்திலும் அதற்கான நிதி இல்லை. ஆனால், ஆவின் போன்ற இலாபத்தை ஈட்டுகின்ற நிறுவனங்களிலிருந்து நிதியைப் பெற்று, ஆண்டிற்கு சுமார் 10 கட்டடங்களையாவது கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். எப்பொழுது கேட்டாலும், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டிக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் 60 சங்கங்கள் உள்ளன. எப்படி 3½ இலட்சம் ரூபாய் செலவு செய்து கட்டுவது? எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலித்து, மத்திய, மாநில அரசிடமிருந்து சிறப்பு நிதியைப் பெற்றுத்தந்து, இதுபோன்று நன்கு செயல்படுகின்ற சங்கங்களுக்கு என்று ஒரு limit வைத்துக்கொள்ள வேண்டும். 500 லிட்டருக்கு மேல் வருகின்ற சங்கங்களுக்கெல்லாம் அரசின் சிறப்பு நிதியிலிருந்து கட்டடம் கட்டித் தரப்படும் என்ற நிலையை எடுத்து, கட்டடம் கட்டித் தந்தால் ஏதுவாக இருக்கும் என்கின்ற அடிப்படையில், அதைச் செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதி, மீனம்பாளையம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் தற்பொழுது தினந்தோறும் 440 லிட்டர்

2011 ஜனவரி 12]

பால் கொள்முதல் செய்யப்படுகிறது. தற்பொழுது அந்தச் சங்கம் 61 ஆயிரம் ரூபாய் அளவிற்கு இலாபத்தில் இயங்கிவந்தாலும்கூட, வருகின்ற காலங்களில் இலாபம் அதிகமாக இருக்குமேயானால், அதற்கான சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

அதேபோல, காங்கேயம் தொகுதியில் பட்டக்காரன்புதூரில் தினசரி 430 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, தற்போது இலாபகரமாக இருக்கிற காரணத்தால் சங்கத்தின்மூலமாக 5 சென்ட் நிலம் வாங்கப்பட்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 3 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. மூன்று மாத காலத்தில் இந்தப் பணிகள் முடிவடையும். இன்னும் இலாபகரமாக உள்ள சங்கங்களில் சொந்தமாக இடம் வாங்கி கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். அது நிச்சயமாகத் தொடரும் என்பதையும் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி ஆதரவோடு திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற நான்கரை ஆண்டு காலத்திலே பால் விவசாயிகளுக்குப் பலமுறை பால் விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்த முறையும் எருமைப் பாலுக்கு இரண்டு ரூபாயும் பசும்பாலுக்கு ஒரு ரூபாயும் உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், இன்றைக்கு இருக்கிற உற்பத்திச் செலவிலே இது போதாது என்கிற காரணத்தினாலே மீண்டும் 18 ஆம் தேதி போராட்டம் என்று அறிவித்திருக்கிறார்கள். எனக்காகவும் நமது அவை உறுப்பினர்களுக்காகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களை இன்னொருமுறை அழைத்துப் பேசி, தேர்தல் நேரமாக இருப்பதால் அவர்களைச் சமாதானம் செய்து, அவர்களுடைய உணர்வுகளை மதித்து, அதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். பிரதம பால் உற்பத்தியாளர் சங்கங்களிலே செயலாளராகப் பணியாற்றுகிறவர்களை, ஆவின் ஊழியர்களாகக் கருத வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக நிலுவையிலே இருந்து வருகிறது. 20, 25 ஆண்டுகளாக குறைந்தபட்ச சம்பளம் ரூ.2,500—லே பணியாற்றி வருகிறார்கள். ரூ.850/— நிவாரணத் தொகை அறிவிக்க வேண்டுமெனக் கோரியிருக்கிறார்கள். அதைச்

[2011 ஜனவரி 12

செய்வார்களா என்பதைக் கேட்பதோடு, ஈரோடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க ஒன்றியத்திலே 17 ஆண்டுகளாக சாதாரண பணியாளராகப் பணியாற்றியவர்கள் பணி வரன்முறை செய்யப்படாமல், எந்தவிதமான ஊதிய உயர்வும் இல்லாமல் உள்ளார்கள். நீண்டகாலமாக இந்தக் கோரிக்கை நிலுவையில் இருந்து கொண்டு இருக்கிறது. இதைப் பலமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்றிருக்கிறேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஈரோடு கூட்டுறவுச் சங்கம் இலாபத்திலே இயங்கவில்லை என்ற பதிலை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆவின் போன்ற நிறுவனங்கள் சேவை நிறுவனம்தானேயொழிய இலாபத்தைப் பார்க்கிற நிறுவனங்கள் அல்ல. கூட்டுறவு போன்ற சேவை நிறுவனங்கள். எனவே, இதற்கு சிறப்பு நிதியைப் பெற்று அந்த ஊழியர்கள் நலமாக இருப்பதற்கு வாய்ப்பு வசதிகளை செய்து தருவாரா என்பதைக் கேட்பதோடு, தேர்தல் நேரம் என்பதாலே கண்டிப்பாக பால் உற்பத்தியாளர்களை நீங்கள் அழைத்துப் பேசி, அவர்களை சமாதானப்படுத்தி போராட்டத்தைக் கைவிடுவதற்கு, லிட்டருக்கு ஒரு ரூபாய், அல்லது இரண்டு ரூபாய் கூடுதலாகப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்க ஆவன செய்வாரா என்று பணிவோடு உங்கள் சார்பிலே கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பால் உற்பத்தியாளர் சங்கத்தினுடைய தலைவர்கள் போராட்டம் நடத்துகிற காலத்திலெல்லாம், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் தளபதி அவர்களும், மூத்த அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் பலமுறை அழைத்துப் பேசியிருக்கிறார்கள். நானும் அழைத்துப் பேசியிருக்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் எந்த முதலமைச்சரும் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினுடைய தலைவர்களை அழைத்துப் பேசியதேயில்லை. தலைவர் கலைஞர்

2011 ஜனவரி 12]

அவர்கள்தான் அழைத்துப் பேசியதோடு மட்டுமல்லாமல், பால் விலையையும் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆட்சிக் காலத்தில் பசும்பாலுக்கு ஒரு ரூபாய் ஐம்பது காசும், எருமைப் பாலுக்கு ஒரு ரூபாய் ஐம்பத்தாறு காசும்தான், ஐந்து ஆண்டு காலத்தில் உயர்த்திக் கொடுத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, நான்கு முறை பசும்பாலுக்கு ஆறு ரூபாய் அறுபது காசும், எருமைப் பாலுக்கு பன்னிரெண்டு ரூபாய் எழுபது காசும் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், பசும்பாலுக்கு நான்கு மடங்கு விலை உயர்வும், எருமைப் பாலுக்கு எட்டு மடங்கு விலை உயர்வும் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம்.

அதைப்போல, சென்ற ஒரு வார காலத்திற்கு முன்பாக பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவர்கள் திரு. செங்கோட்டுவேல், திரு. முகமது அலி மற்றும் திரு. எஸ்.ஆர். ராஜகோபால் போன்றவர்களையெல்லாம் அழைத்துப் பேசிய நேரத்தில் விலையை அதிகமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர் அவர்களுடைய மத்தியில் பேச்சுவார்த்தை நடைபெற்ற நேரத்தில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நானும், என்னுடைய துறை அதிகாரிகளும் பேசிய நேரத்தில் கடைசியாக பசும்பாலுக்கு இரண்டு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் ஐம்பது காசும் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னார்கள். நான், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களிடத்தில் தெரிவிக்கிறேன் என்று சொன்னேன். கூட்டம் முடிந்து, பேச்சுவார்த்தை முடிந்து அவர்கள் வெளியே செல்கிற நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, எது உசிதமாகப்படுகிறதோ, எது சரியாகப்படுகிறதோ அந்த விலையை அறிவித்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டுச் சென்ற காரணத்தினால்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் சொல்லி இன்றைய நிலைமையிலே விற்பனை விலையை ஏற்றாமல், கொள்முதல் விலையை மாத்திரமே ஏற்றி, ஆவினுடைய பால் விற்பனை விலையை உயர்த்தாமல் இன்றைக்கு அறிவித்திருக்கிறோம். இந்த 5 ஆண்டு காலத்தில் இவ்வளவு விலை உயர்வு யாருடைய ஆட்சிக் காலத்திலும் நடைபெறவில்லை என்பதைத் தங்கள்மூலம் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.